# News Release

# வாகன் நகரத்திற்குப் புதியதாக ஒன்று கூடவும் விளையாடவும் இடம் உருவாகிறது

*சமூகப் பசுமை-வெளி – இயற்கை நிலங்களைப் பாதுகாத்து, பூர்வீக மக்களின் வரலாற்றைக் கௌரவிக்கும் முயற்சி*

**வாகன், ஒன்ராறியோ (மார்ச் 31, 2026)** – இன்று முன்னதாக, மேயர் ஸ்டீவன் டெல் டூகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள், வார்டு 3 பகுதியில் புதிய சமூகப் பசுமை-வெளி உருவாக்கப்படுவதாக அறிவித்தனர். இது வாகன் நகரத்தில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பூர்வீக மக்களின் ஆழமான மற்றும் தொடர்ந்துள்ள இருப்பைக் கௌரவிக்கவும், அவர்கள் வாழ்ந்த நிலங்களைப் பாதுகாக்கவும், அனைத்து வயதினருக்கும் பயன்படுத்தக்கூடிய புதிய இடத்தை வழங்கவும் உருவாக்கப்படுகிறது.

இந்தப் பசுமை-வெளி டெஸ்டன் சாலை மற்றும் பைன் வாலி சாலை பகுதியில் அமைக்கப்படும். இது இயற்கை தோற்றத்துடன், திறந்த வெளிகள், நடைபாதைகள் மற்றும் இணைந்த பாதைகள் கொண்ட வரவேற்கத்தக்க இடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வடிவமைப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், அனைவரும் எளிதில் பயன்படுத்தும் வசதியையும் முன்னிலைப்படுத்துகிறது. சில பகுதிகள் இயற்கையான நிலையில் அப்படியே பாதுகாக்கப்பட்டு, அதே நேரத்தில் அனைவரும் வெளிப்புற அனுபவங்களை அனுபவிக்க முடியும் வகையில் அமைக்கப்படும்.

சமீபத்தில் நகரம் பொதுப் பயன்பாட்டிற்காக ஒதுக்கிய இந்த நிலங்கள், அதன் இயற்கை தன்மையைப் பாதுகாக்கும் வகையில் காக்கப்படுகின்றன. அதே நேரத்தில், மக்கள் இயற்கையுடன் இணைந்து, சமூகமாக ஒன்றிணையக்கூடிய இடமாகவும் இது பயன்படும். இந்த நிலங்கள் பூர்வீக மக்களுக்கு (வெண்டாட் மக்கள் உட்பட) கடந்த காலத்திலும் இன்றும் மிகவும் முக்கியமானவை என்பதை நகரம் புரிந்துள்ளது. அவற்றை மரியாதை, அங்கீகாரம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய மதிப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் பாதுகாக்க உறுதி செய்துள்ளது.

இந்தச் சமூகப் பசுமை-வெளிக்கு அருகில் தனிப்பட்ட விளையாட்டு பகுதி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சிறுவர் முதல் பெரியோருக்கான விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படுகின்றன. மேலும், ஆண்டு முழுவதும் வசதியாகப் பயன்படுத்த நிழற்குடை அமைப்பும் ஏற்படுத்தப்படும். இந்த விளையாட்டு பகுதி அருகிலுள்ள காடு போன்ற பகுதிகளுடன் இயல்பாக இணைக்கப்பட்டுள்ளது. இவை சேர்ந்து ஒரு பெரிய பூங்கா மற்றும் திறந்த வெளி அமைப்பின் பகுதியாக இருந்து, மக்களுக்கு அதிகமான பொழுதுபோக்கு

வாய்ப்புகளை வழங்குகிறது, செயலில் ஈடுபடும் வாழ்க்கை முறையை ஊக்குவிக்கிறது, மேலும் இயற்கை மற்றும் நடைபாதை இணைப்புகளை வலுப்படுத்துகிறது.

**மேற்கோள்கள்**

“வார்டு 3 பகுதியில் விரைவில் ஒரு புதிய சமூகப் பசுமை-வெளி உருவாக உள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்று நாம் அறியும் நகரமாக வாகன் மாறுவதற்கு முன்பே, இந்த நிலம் பூர்வீக சமூகங்களால் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டது. இந்தப் புதிய சமூகப் பசுமை-வெளி, அந்த வரலாற்றை நாம் அங்கீகரிக்கவும், தொடர்ந்து மரியாதையும் நன்றியும் வெளிப்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொறுப்பை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டியதை சிந்திக்கவும் ஒரு வாய்ப்பாக இருக்கும். இந்தப் பாரம்பரியத்தை எதிர்காலத் தலைமுறைகளுக்காகப் பாதுகாக்க நகரத்துடன் இணைந்து பணியாற்றிய வெண்டாட் நாட்டு மக்களுக்கு நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கிய வார்டு 3 கவுன்சிலர் ரோசன்னா டி ஃப்ரான்செஸ்கா அவர்களுக்கும், பல துறைகளில் உள்ள நகர ஊழியர்கள் சிந்தனையுடன் செய்த பணிக்கும் மற்றும் ஒத்துழைப்பிற்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். இந்தப் பூங்கா மக்கள் ஒன்று கூடவும், மகிழ்ச்சியாக நேரம் செலவிடவும், மேலும் வான் நகரத்தின் வரலாற்றில் முக்கியமான பகுதியாக இருக்கும் பூர்வீக சமூகங்களைப் பற்றிய அவர்களின் புரிதலை ஆழப்படுத்தவும் உதவும் இடமாக மாறும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.”

\- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

“வார்டு 3 சமூகத்திற்கு விளையாடவும், இயற்கையுடன் இணையவும் ஒரு புதிய இடத்தைக் கொண்டு வருவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பசுமை-வெளி ஒரு சாதாரணப் பூங்கா மட்டுமல்ல. இது கற்றல், சிந்தனை மற்றும் தொடர்புக்கான இடமாக இருக்கும், மேலும் அனைத்து வயதினரும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க இணைந்து பணியாற்றிய வெண்டாட் நாட்டு மக்களுக்கும் நகர ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். இந்த முயற்சியில் தொடர்ந்து தலைமைத்துவம் வழங்கிய மேயர் ஸ்டீவன் டெல் டூகாவிற்கும் நன்றி. இது உருவாக்கப்பட்ட பிறகு, இந்த இடம் பல தலைமுறைகளுக்கு ஒரு பிரபலமான அண்டை பகுதி இடமாக மாறும் என்று நம்புகிறேன்.”

\- வார்டு 3 கவுன்சிலர் ரோசன்னா டி ஃப்ரான்செஸ்கா

“எங்கள் முன்னோர்களிடமிருந்து வந்த போதனைகளில் வேரூன்றிய நிலையில், வெண்டாட் நாடு நிலத்தை ஒரு பகிர்ந்த பொறுப்பாக அணுகுகிறது. இந்த இடம்,

வெண்டாட் நாட்டினருக்கும் மற்ற பூர்வீக மக்களுக்கும் நீடித்த கலாச்சார, ஆன்மீக மற்றும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட உயிர்ப்புள்ள பாரம்பரிய நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும். இது இது தலைமுறை தலைமுறையாக வந்த அறிவை காட்டுகிறது வந்தஅறிவை பிரதிபலிக்கிறது — அந்தப் போதனைகள் இன்று கூட நம்மை மரியாதையுடன், சமநிலையுடன் மற்றும் பொறுப்புடன் வாழ வழிகாட்டுகின்றன. எங்கள் நீண்டகால ஒத்துழைப்பு மற்றும் உறவு மரபுகளைப் பின்பற்றி, ஒருகாலத்தில் வெண்டாட் நாடும் மற்ற பூர்வீக சமூகங்களும் வாழ்ந்த இந்த நிலங்களைப் பாதுகாக்க வாகன் நகரம் அளித்துள்ள உறுதியை நாங்கள் வரவேற்கிறோம். இந்தப் பணியில் வெண்டாட் நாட்டை முக்கியக் கூட்டாளியாக அங்கீகரிப்பது, இந்த இடம் வளர்ச்சியிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும், பல தலைமுறைகளுக்குக் கற்றல், தொடர்பு மற்றும் சிந்தனைக்கான இடமாக நீடிக்க வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தும் பகிர்ந்த பொறுப்பை வெளிப்படுத்துகிறது.”
- வெண்டாட் நாட்டுத் தலைமை தலைவர் பியர் பிகார்ட்

**முக்கியத் தகவல்கள்**

- இன்று இதற்கு முன்பு, மேயர் ஸ்டீவன் டெல் டூகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் வார்டு 3 சமூகத்திற்கு ஒரு புதிய சமூகப் பசுமை-வெளி உருவாக்கப்படுவதாக அறிவித்தனர்.
- இந்தப் புதிய பசுமை-வெளி டெஸ்டன் சாலை மற்றும் பைன் வாலி சாலை பகுதியில் அமைக்கப்படும். இது இயற்கை தோற்றத்துடன், திறந்த வெளிகள், நடைபாதைகள் மற்றும் இணைந்த பாதைகள் கொண்ட வரவேற்கத்தக்க இடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சமீபத்தில் நகரம் பொதுப் பயன்பாட்டிற்காக ஒதுக்கிய இந்த நிலங்கள், அதன் இயற்கை தன்மையைப் பாதுகாக்கும் வகையில் காக்கப்படுகின்றன. அதே நேரத்தில், மக்கள் இயற்கையுடன் இணைந்து, சமூகமாக ஒன்றிணையக்கூடிய இடமாகவும் இது பயன்படும்.
- சமூகப் பசுமை-வெளியின் அருகில், பூங்காவிற்குள் ஒரு தனிப்பட்ட விளையாட்டு பகுதியும் உருவாக்கப்பட உள்ளது. இதில் சிறுவர் முதல் பெரியோருக்கான விளையாட்டு மைதானங்கள் மற்றும் நிழற்குடை அமைப்பு இடம்பெறும். இந்தப் பகுதி அருகிலுள்ள காடு போன்ற பகுதிகளுடன் இயல்பாக இணைக்கப்பட்டுள்ளது. இது வாகன் சமூகத்திற்கான ஒரு பெரிய, தொடர்ச்சியான பூங்கா வலையமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும்.

**மேலும் அறிய**

- [vaughan.ca/**parks**](vaughan.ca/parks)

# News Release

**இந்தச் செய்தி வெளியீட்டை கீழ்க்காணும் மொழிகளில் வாசிக்கவும்:**

- காண்டோனீஸ்
- பார்சி
- எபிரேயம்
- ஹிந்தி
- இத்தாலிய மொழி
- மாண்டரின்
- ரஷ்ய மொழி
- ஸ்பானிய மொழி
- டேகலாக்
- தமிழ்
- உருது
- வியட்நாமிய மொழி

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca